TAMIL

NATIONAL GALLERY SINGAPORE

# KIM LIM

The —— Space —— Between

A Retrospective

## கிம் லிம்: தி ஸ்பேஸ் பிட்வீன்.

கிம் லிம்: தி ஸ்பேஸ் பிட்வீன். சிங்கப்பூரில் பிறந்த பிரிட்டிஷ் கலைஞரான (1936–1997) லிம்மை 20 ஆம் நூற்றாண்டின் சிற்ப, அச்சுத் தயாரிப்பில் முக்கியமானவராகத் தெரிவிப்பதை, ரெட்ரோஸ்பெக்டிவ் நோக்கமாகக் கொண்டுள்ளது.பொருள்பொதிந்த இந்தக் கண்காட்சி, இன்றுவரையில் ஆகப் பெரியது. ஆசியா, ஐரோப்பா முழுதும் பல்வேறு கலாசசாரமேலான மதிப்புரைகளை லிம் எவ்வாறு பெற்றார் என்பதை ஆராய்கிறது. அவர் தம் விரிவான பயணங்களின் வழி அவரின் தனித்துவமான அணுகுமுறை, பங்களிப்புகளை வெளிப்படுத்தினார்.

கலைஞர் யூரோ-அமெரிக்க நிதர்சனம், துகிலுரிக்கப்பட்ட குறைபாடுகளை எதிர்த்தார், அதற்கு பதிலாக, சிற்ப மொழி உத்வேக உலகப் பற்று, பன்முகத்தன்மை கொண்ட ஆதாரங்களை வலியுறுத்தினார். இந்த அணுகுமுறை அவரை,நவீனக் கலையின் அனைத்துலக நிலையங்கள், அவற்றின் சேகரிப்புகளுக்கு அப்பாலும் வெற்றிகரமாகக் கொண்டுச் சென்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பிரிட்னுக்குப் புலம்பெயர்ந்தோர், புலம்பெயர்ந்த கலைஞர்களின் முதல் தலைமுறைத் தொகுதியினராக,லிம் தமது து வாழ்க்கையையும் பணியையும் முன்வைப்பதற்கும் விளக்குவதற்கும் அடிக்கடி பயன்படுத்தப்படும் கலாசாரக் குறிகாட்டிகளை, உறுதியாக மறுத்தார்.

அந்தக் கண்காட்சி,, நான்கு தசாப்தங்களாக உருவாக்கப்பட்ட முக்கிய சிற்பங்கள், சிற்றேடுகள், , இதுகாறும் கண்டிராத புகைப்படங்கள், காப்பகப் பொருட்கள் முதலியவை, லிம்மின் சிற்பத் தத்துவம் பற்றிய விரிவான கண்ணோட்டத்தை விவரிப்பதோடு, அவரின் அறிவுசார் வளர்ச்சி, கலைப் பயிற்சி, புத்தாக்க உறவுகள் பற்றிய புதிய நுண்ணறிவுகளை பகர்கின்றன.

# பிரிவு: ஆரம்பக்காலப் பணிகள்: திரட்டல், உருவப் படமெழுதுதல்

1954 ஆம் ஆண்டு,லண்டன் செயின்ட் மார்ட்டின் கலைப் பள்ளியில் பயிலும்போது, லிம் தம் பள்ளியின் உருவ ஓவியத்துறை மீதிருந்த கவனம் கண்டு மிரண்டார். மறைபொருள் ஓவியத்தில் தம் ஆர்வத்தைத் தொடர வேறு வழிகளைத் தேடினார் 1956 இல் ஸ்லேட் ஸ்கூல் ஆ்ஃப் ஃபைன் ஆர்ட் பள்ளிக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் உலோகச் செதுக்கல், கல் அச்சுக்கலை, திரைச் சீலை அச்சிடுதல் போன்ற தொன்மையான செதுக்குக் கலையார்வத்தைத் தூண்டிய நுட்பங்களைக் கற்க முற்பட்டார். கான்ஸ்டான்டின் ப்ரான்குசியின் படைப்புகளை புத்தகங்கள் வாயிலாகப் படித்தறிந்தது, அடிப்படை, தொன்மையான வடிவங்கள் மீதான அவரின் ஈர்ப்பைத் தூண்டிற்று. அதுவே, அவரின் சிற்ப அணுகுமுறை ஆர்வத்திற்கு அடித்தளம் அமைத்தது. லிம்மின் கலையார்வக் கல்வி அதனுடன் நின்றுவிடவில்லை.. அருங்காட்சியகங்கள், நூலகங்களுக்கு மேற்கொண்ட வருகைகள், விரிவான பயணங்கள், ஐரோப்பா, ஆசியாவின் பல்வேறு பொருளகங்கள், கலாசாரக்கட்டிடக்கலைத் தள வருகை, அவற்றின மகத்துவத்தை லிம்மிற்கு அம்பலப்படுத்தின. அங்கு ஆரம்பக்கால நாகரிகங்களின் அறிமுகம், அவருக்கு மரபுகளில் ஆர்வத்தைத் தூண்டின. அந்த அரிய அனுபவங்களை தமது “முக்கியக் கலைக் கல்வி" என அவர் கருதினார்.

# நெடுவரிசைகள்

லிம், தமது பயிற்சி முழுவதும், செங்குத்துத் தன்மையுடன் உருவாக்க பல்வேறு வழிகளை ஆராய்ந்தார். தனித்துவமான அலகுகளை அடுக்கி வைப்பது முதல், ஒற்றைக் கல்லில் நேரியல் கீறல்கள் செய்வது வரை – பழமையான சிற்ப வடிவங்களுடனான அவரின் அனுபவ அறிவிலிருந்து தோன்றியதாக இருக்கலாம். லிம்மின் முறையான ஆர்வங்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய புதிய நுண்ணறிவை இந்தப் பகுதி விவரிக்கின்றது.. அது, இன மரபுச் சின்னம் சார்ந்த செங்குத்துச் சிற்பங்களை, குறிப்பிடத்தக்க வடிவங்களாக ஆராய்கிறது, அதை அவர் தம் வாழ்க்கை முழுவதும் மீண்டும் மீண்டும் எதிர்நோக்கினார். அவரின் நிமிர்நிலை தூண் வரிசை அடிப்படையிலான சிற்பங்கள், பல ஆண்டுகளாக அவர் உருவாக்கிய சிற்ப மொழி பற்றிய யோசனைகளை மீண்டும் இடம்பெறச் செய்கின்றன.

## அபாகஸ்

1959
பிளாஸ்டர், மரம், உலோகம்

சிங்கப்பூர் தேசியக் கலைக் கூடத் தொகுப்பு
2015-00417

கிம் லிம், அபாகஸின் (பரறகட்டையின்) இரண்டு பதிப்புகளை வெவ்வேறு அளவுகளில் உருவாக்கினார், அதே போல் கரித்துண்டால் வரைதலும், சிற்பக் கலைப்படைப்பாக இருக்கலாம் என்பதை ஒப்புக்கொண்டார். அசையும் மணிகள் கொண்ட பாரம்பரிய சீனா் எண்ணும் சட்டமான அபாகஸ், சிங்கப்பூர் கலைஞரின் பெரிய குடும்ப வணிகர்-வர்க்கப் பின்னணியைக் குறிக்கிறது. ஒரு புகைப்படம் லிம் இரண்டு அபாகஸ் சிற்பங்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி, திரையை உருவாக்குவதைக் காட்டுகிறது. ஆயினும் கூட, அவரின் தொலைதூரப் பார்வை அபாகஸ்களால் கட்டுப்படுத்தப்படாமல் தோன்றுகிறது. அவரின் கலைத்துறை வாழ்க்கையை கலாசார அடையாளத்தால் கட்டுப்படுத்த முடியாது என்று நமக்குச் சொல்வது போல் இருக்கின்றது.

## நெடுவரிசை

1971–1972
துருவுறா எஃகிரும்பு

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் தொகுப்பு
2015-00419

கடின தொழிலியல் உலோகத்தில் வார்க்கப்பட்ட, 1970களின் இந்தச் சிற்பம், அப்போது மெதுவாகவே வளர்ந்த குறைந்தபட்ச அழகியலுக்கு பதிலுரைகிறது.

நிமிர்ந்திருக்கும்போது கிடைமட்டமாகக் கிடப்பது போலவே, மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியான அலகு- நெடுவரிசையை வைத்து, , நிமிர்ந்த இடுகையின் மீதான நம் எதிர்பார்ப்புகளை லிம் உயர்த்துகிறார். அலகுகளின் இடைவெளிகளை மாற்றுவதாலோ  அவற்றின் நோக்குநிலையை மாற்றுவதாலோ, அளவு அல்லது திசையமைவை சிற்பம் அனுமதிக்கிறது.

## காரியடிட்

1961
மரம், கல்

தனிப்பட்டச் சேகரிப்பு

செங்குத்தான, கட்டிடக்கலை கட்டமைப்புகள் 1960களிலிருந்து லிம்மின் முக்கிய சிற்பக் கலையின் பண்புக்கக்கூறாகும். நெடுவரிசை வெளிப்பாடுகளின் குறிப்பிடத்தக்க வரம்பை அடைய, அடுக்கி வைத்தல், பிரித்தல், மாற்றுதல் போன்ற பல்வேறு முறைகளைப் பயன்படுத்துகிறார். அவரின் காரியடிட் சிற்பங்கள் பண்டைய கிரேக்கக் கட்டிடங்களில், ஆதாரத் தூண்களாக செயல்படும் அலங்காரப் பெண் உருவங்களைக் குறிப்பிடுகின்றன. பண்டைய கலைப்பொருட்களின் சக்திவாய்ந்த அடையாளங்களில், லிம்மின் ஆரம்பக்கால ஆர்வத்தை அது காட்டுகிறது. அவரின் அருங்காட்சியக வருகைகள், அனைத்துலகப் பயணங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், லிம்மின் கைகளில், இந்த உருவம், சக்திகள் நீங்கலானவையாக மாற்றப்படுகிறது. லண்டன் ICA இல் நடந்த 26 இளம் சிற்பிகளின் கண்காட்சியில் சாமுராய் உடன் கார்யாடிட் காட்டப்பட்டது, அது UK இன் நம்பிக்கைக்குரிய கலைஞர்களை அடையாளம் காட்ட முற்பட்டது.

## ரோனின்

1963
மரமும் வெண்கலமும்

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டுடியோ, லண்டன் சேகரிப்பு

லிம், மலாயாவில் ஜப்பானியர் ஆக்கிரமிப்பின் கொடூரங்களை அனுபவித்தார். ஆனால் அவருக்கு அந்த அனுபவம் இருந்தபோதிலும், அவர் ஜப்பானிய கலாசாரம், கட்டடக்கலை மீது ஆழ்ந்த நன்மதிப்பை வளர்த்துக்கொண்டார். அவர் ஜப்பானுக்குச் சென்று, அதன் தனித்துவ வடிவங்கள், ஜென் தோட்டங்கள் போன்றவற்றின் நடைமுறைகளை ஆவணப்படுத்தினார். ரோனின் என்பது , எஜமானருக்கு சேவை செய்யாமல், தற்கொலைச் சடங்கை நிராகரிக்கும், அல்லது குடும்ப உறவுகளைத் துண்டித்து, அலைந்து திரிந்த சாமுராய்யைக் குறிக்கும் சொல். சிற்பம், அதன் அடுக்கப்பட்ட, அல்லது சீரான ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஸ்கிராப் மரத் துண்டுகள் மூலம் ஒரு முரட்டுத்தனமான கொடூரத்தை பரிந்துரைக்கிறது. அதன், அரை, வட்டவடிவ மேல் பகுதி துண்டிக்கப்பட்டுள்ளது. அடுக்கப்பட்ட வடிவங்களின் முன்பக்கக் காட்சி ஜப்பானிய கையெழுத்துக் குறியீடுகளை ஒத்திருப்பதாகவும் பரிந்துரைக்கப்படுகிறது.

## பிரிவு: கூர்மையான விளிம்புகள், விசித்திரமான நிறம்

1960களின் நடுவிலிருந்து பிற்பகுதி வரை, கிம் லிம் தமது சிற்பங்களின் முன்பக்கச் சந்திப்பை வலியுறுத்தினார். "(அவர்களைச்) சுற்றி நடப்பது கண்டுபிடிப்பு என்பதை விட விளக்கத்தை அளிக்கும்" என அவர் குறிப்பிட்டார். அந்த வேலைகள் முதன்மையாக பொறிக்கப்பட்ட பிளாக்போர்டு, எஃகு, அலுமினியம், கண்ணாடியிழை போன்றவற்றைப் பயன்படுத்திச் செயல்படுத்தப்பட்டன. வண்ணப்பூச்சுப் பயன்பாடு அவரின் சிற்பங்களுக்குச் சீரான, ஆனால் உணரப்ப்படா மேற்பரப்பை வழங்கிற்று.. அது, அவருடைய வடிவங்கள், விமானங்களின் துல்லியத்தை ஒருமுகப்படுத்துவதன் மூலமோ விரிவுபடுத்துவதன் மூலமோ வலியுறுத்த உதவிற்று.. ஹென்றி மூர், பார்பரா ஹெப்வொர்த் ஆகியோரின் செதுக்கப்பட்ட மாதிரியான ஒற்றைக்கல் படைப்புகளிலிருந்து விலகி, சிற்பக்கலைக்கு புதிய வியாக்கியானம், நாடும் சிற்பிகளுக்கு மத்தியில், லிம்மின் படைப்புகள் நாணயத்தைப் பெற்றன. பிலிப் கிங், அந்தோனி காரோ, லின் சாட்விக், எடுவார்டோ பாலோஸி, வில்லியம் டர்ன்புல் போன்ற முக்கிய பிரிட்டிஷ் பிரமுகர்களுடன் லிம் முக்கிய கண்காட்சிகளில் இடம்பெற்றார், அவர்களும் அதே போன்ற முன்னேற்றத்தைத் தேடினர். பல்வேறு ஊடகங்களில் லிம்மின் வண்ணப் பிரதிபலிப்புகள், கையாண்ட வரைகோடுகள், ஒரே மையம் கொண்ட கோடுகள் வழி, அவர் ஏற்படுத்திய, உடலியல், உணர்ச்சியம நிலை வரை, பொருளுக்கு அப்பாற்பட்ட மனநிலையயை அந்தப் பிரிவு ஆராய்கிறது. அந்த அணுகுமுறை, அவரின்  வெளிப்படையான விருப்பத்தை, நிரூபிக்கிறது,எப்போதும் போல, கட்டுப்படுத்தப்பட்ட வழிமுறைகளால் அடையப்பட்டதையே அது சுட்டுகிறது.

## போர்னியோ ஐ

1964
வண்ணம் பூசப்பட்ட மரப்பலகை

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டுடியோ, லண்டன் சேகரிப்பு

லிம்ஸின் போர்னியோ I, எனும் குறிப்பிடத்தக்க சிவப்புச் சிற்பம், கிரேட் பிரிட்டனின் கலை மன்றத்தின் 1966 *நிற ஆய்வியல் சிற்பக் கண்காட்சி* அட்டவணையின் முன் அட்டையை அலங்கரித்தது. அது முப்பரிமாணக் கலையில், வண்ணத்தின் திறனை எடுத்துக்காட்டுகிறது. அந்த நேரத்தில், ஒரே வண்ணம் கொண்ட சுருக்க வடிவங்களின் ஓவியம், "பயன்படுத்தப்பட்ட பொருளையும், அதன் துணை குணங்களையும் மறுப்பதற்கான" வழியாக வலியுறுத்தப்பட்டது. எனினும்,, அது சிற்ப வடிவங்களின் வெளிப்பாட்டு மேற்பரப்பு அமைப்புமுறைக்கு எதிரான ஒரு திருப்பமாகும். ஆயினும்கூட, போர்னியோ I இன் உச்சியில் வடிவம் ஒரு பறவையின் இறக்கைகள் அல்லது முகடு; அதனுடன் லிம்மின் தந்தையின் பாரம்பரியமான போர்னியோன் சரவாக்கின், இபான் பழங்குடியினரின் பிரம்மாண்டச் சடங்குக் தலைக்கவசம் ஆகியவற்றைக் குறிக்கிறது. போர்னியோ II, போர்னியோ I-ஐப் போன்ற அதே வடிவத்தைப் பகிர்ந்து கொள்கிறது. ஆனால் எஃகு உலேகத்தால் அமைந்த, ஸ்ப்ரே பச்சை வண்ணம் பூசப்பட்டு, , லிம் தம்த சிற்பம் பார்வையாளரின் அனுபவத்தை மாற்றுவதற்கான கூறுகளை, எவ்வாறு கையாளுகிறார் என்பதை நிரூபிக்கிறது.

## பெயரிடப்படாதது

1965
காகித படத்தொகுப்பு

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டுடியோ, லண்டன் சேகரிப்பு

## படிகள்

1967
துருவுறா எஃகிரும்பு, பற்சிப்பி வண்ணப்பூச்சு, துத்தநாகப் பூச்சு

வில்லியம் டர்ன்புல்லின் பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத் தொகுப்பு
2001-02664

காணும் காட்சி, சிற்பக்கலைச் சிக்கல்களைத் தீர்க்க, லிம் அடுத்தடுத்து சமதளப் பரப்புகளில், நிழல்வடித்தைப் பயன்படுத்துகிறார். அளவை மறைமுகமாகக் குறிக்கும் வழி தேடியபோது,, நிறைவைக் குறிப்பிடாது, பெரும் பகுதியெனக் குறிப்பிட்டார். வேலைப்பாட்டில் கொள்ளளவு உணர்வை உருவாக்க, வட்டுகள் அளவை அதிகரித்து, நிரப்பிடக் கொள்ளவு அதிகரிக்கப்படுகிறது.

அரைவட்ட வட்டுகளின் தேவையான அம்சங்களுக்குப் "படிகளை" எளிமையாக்கி, படைப்பிற்கு, முன்னிலைஅணுகுமுறையை உருவாக்குகிறார் லிம். படிப்படியாக விவரிப்பதை விட, உடனடி விளக்கத்தையே விரும்புகிறார். ஒரு சாதகக் கோணத்திலிருந்து முழுமையாக விளக்கும் படைப்புகளை உருவாக்குவதே, அவர் நோக்கம். சிற்பத்தில் வெள்ளை நிறம் பூசுவது, செதுக்குப் பொருளின் உண்மை மொத்தத்தையும் அடர்த்தியையும் மறைக்க உதவுகிறது. மேலும் இருப்பதை விட, அதில் அதிகம் இருக்கும் அனுபவத்தையும் அளிக்கிறது.

## நீலக் குறிப்பு

1966
வண்ணம் பூசப்பட்ட எஃகு, மரம்

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டுடியோ, லண்டன் சேகரிப்பு

## எதிரொலி

1967
துருவுறா எஃகிரும்பு, பற்சிப்பி வண்ணப்பூச்சு, துத்தநாக பூச்சு

வில்லியம் டர்ன்புல்லின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத் தொகுப்பு
2001-02663

"*ப்ளூ நோட்*" "*எக்கோ*" போன்ற தலைப்புகளில் பிரதிபலிக்கும் ஒலி பண்புக் கூறு கருப்பொருளை லிம் அடிக்கடி தம் சிற்பங்களில் காட்சிப்படுத்தினார். இசைக் கூர்களைப் பிரதிபலிக்கும் சுருதி பேதம், இடைவிடா எதிரொலி ஆகியன-அவரின் கலை அணுகுமுறையைச் சுட்டின.
.

லிம்மின் சிற்பக் கலையின் தனி முத்திரைகளில், நிறம் முக்கியமானது. சிற்பத்தின் விளிம்பு அல்லது நிலையில் மாற்றத்தை முன்னிலைப்படுத்த, அவர் நிறம் அல்லது அமைப்பு மாற்றங்களைப் பயன்படுத்தினார். "ப்ளூ நோட்" டின் நீலநிற பட்டை, அல்லது "எக்கோ"வின் விறுவிறுப்பான குங்குமப்பூ உட்புறத்தில் இதைக் காணலாம். மற்றொரு பித்தளை சிற்பமான "Twice" (1966) இல் , "ப்ளூ நோட்" வடிவம், கூடுதலாகக் செங்கோணத்தில் "எதிரொலிக்கப்படுகிறது".

லிம் எவ்வாறு உட்புற வெளியை அல்லது எதிர்மறை அளவை ஆராய்ந்தார் என்பதை நிரூபிப்பதிலும் "*Echo*" குறிப்பிடத்தக்கது. இடத்தைக் கட்டுப்படுத்தவும் கையாளவும் அதன் வட்டத்தன்மையை அவர் பயன்படுத்தினார்., மேலும் கிளிஞ்சல் போலும் தரம், வடிவின் தட்டை இயல்பு, ஆகிய இரண்டையும் வலியுறுத்த அவற்றின் மேற்பரப்புகளைப் பயன்படுத்தினார்.. அவரின் இயல்பான உயரம், நிமிர்ந்த கட்டமைப்புகளிலிருந்து வேறுபட்ட அவரின் கூரிய விளிம்புகள், அவற்றின் குந்து நிலை ஆகியவை அவரின் வடிவமைப்பில் முக்கியக் கூறுகளாக இடம்பெற்றன.

## மிட்டாய்

1965
வண்ணம் பூசிய மரம்

கலைகள் மன்றச் சேகரிப்பு, சவுத்பேங்க் சென்டர், லண்டன்

லிம்மின் மிகச் சிறந்த ஆரம்பகால வண்ணப் படைப்புகளில் ஒன்றான கேண்டி, அவரின் 1962ஆம் ஆண்டு பெகாசஸ் சிற்பத்தை நினைவுபடுத்தும்., ஆனால் சில முக்கிய வேறுபாடுகள்.. பெகாசஸ் செங்குத்தாக நிற்கும்போது, கேண்டி சாய்ந்து கொள்கிறது. இரண்டு சிற்பங்களும் மரத்தால் வடிவமைக்கப்பட்டவை, ஆனால் லிம் அட்டையைப் பயன்படுத்தி, மென்தகட்டு உறையால் மேற்பூச்சு அமைத்த கேண்டி, பெரிய அளவில், நுணுக்க வேலை செய்ய அனுமதித்தது. வண்ணம் பூசப்படாத பெகாசஸுடன் ஒப்பிடும்போது, கேண்டியின் தட்டையான பரப்புகளில் ஆரஞ்சு, மஞ்சள் ஆகிய தடித்த, திடமான நிறங்களால்,சிற்பத்தின் ஒட்டுமொத்த வடிவம், அதன் உடனிருப்பு ஆகியவை, பார்வையாளரின் கண்களை ஈர்க்கின்றன.

## நாள்

1966
வண்ணம் தீட்டிய எஃகிரும்பு

லிம் கூன் டெக்கின் பரிசு
தேசிய கலைக்கூடம் சிங்கப்பூர் தொகுப்பு
ASB-0037

'*நாள்*' கலைப்படைப்பு, சிறப்பம்சங்கள் தெளிந்த கோடுகள், தட்டையான வெள்ளை மேற்பரப்பு என தூய வடிவத்தை வலியுறுத்தி மாயையை மறுப்பதாக விளங்குகிறது. செதுக்கிய சிலையை முழுமையாகச் சுற்றிப் பார்த்துப் புரிந்துகொள்ளும் அவசியமின்றி, அதனை உடனேயே தெரிந்துகொள்ளும் விதத்தில் உருவாக்கினார் லிம். அவரின் 1971 சிற்பமான பெயரிடப்படாதது, '*Day*' வடிவத்தை மேலும் ஆராய்கிறது, அதை வட்டமான அடிப்படை இரண்டு சதுரக் கூறுகளாக, கேலியாகப் பிரித்து, இடவெளி, எவ்வாறு வடிவத்தைத் தகர்த்து, இடமாற்றம் செய்யும் என்பதைக் காட்டுகிறது.

'*Day*' முதலில் ராபின்சன் சாலையில் செயல்பட்டு, இடித்து இடமாற்றம் செய்யப்பட்ட, மலேசியா-சிங்கப்பூர் எர்லைன்ஸ் கட்டடத்தின் கூரைக்குரிய பொது கலைப் படைப்பாகப் பிரகடனப்படுத்த ஆணையிடப்பட்டது, ஆனால் சிலை தப்பிதமாக, பயனற்ற எஃகிரும்பு எனக் கருதப்பட்டதால், அதை வாங்குவதுல் கைவிடப்பட்டது. '*Day*' யின் மற்றொரு வகையறா 1966ல் லண்டனின் பேட்டர் சீ பூங்காவின் திறந்தவெளிச் சிற்பக் கண்காட்சியில் ஹென்றி மூர், பார்பரா ஹெப்ப்வொர்த், ஆன்டனி காரோ ஆகியோரின் படைப்புகளுடன் அறிமுகமாயிற்று. அந்த நேரத்தில் பிரிட்டிஷ் கலைவட்டத்தில் லிம்மும் இடம்பெற்றது, பிரிட்டிஷ்க்கலைத்துறை வட்டத்தில் அவரின் முக்கியத்துவத்தை வலியுறுத்திற்று. நாள் UK பதிப்பான.'*Day*' தற்போது யார்க்கைஷயரின் ஹெப்வொர்த் வேக்ஃபீல்ட் கலை அருங்காட்சியக வெளித்தோட்டத்தில் இருக்கிறது, இது நடைபெற்றது,1983 இல்.

## நீர்த்தொகுப்பு

1979
வெண்கலம்
பதிப்பு 2/3

UK அரசின் கலைத் தொகுப்பு

*'Water Piece'* நீர்வடிநிலம், வளைந்த மேற்பரப்புடைய ஐந்து ஆழமற்ற நீர்கிணறுகள், அளவுவாரியாக அடுக்கப்பட்டிருக்கின்றன.. நீரால் நிரப்பப்பட்ட அவை, , காற்று, ஒளி ஆகியவற்றின் மாறுதல்களை ர்நிலையின் மென்மையான சிற்றலைகளாய் வேடம் திரிக்கின்றன. நீர் என்பதே இந்தக் கலைஞரின் விருப்பமான தலைப்பு. சிங்கப்பூர், லண்டனின் மழைக் கால வான்நிலைப்பருவத்தில்ல் வாழ்ந்த அனுபவங்களைக் குறிப்பிடுகிறது. லிம் 1978 முதல், பல்வேறு சிற்பங்களைக், கல் போன்றவற்றைப் பயன்படுத்தி உருவாக்கினார். அந்தச் சிற்பங்கள், இயற்கையுடன் நம் தொடர்பை வலியுறுத்துவதற்காக தோட்ட வெளியில் வைக்கப்படுகின்றன. . 1985இல், லிம், UK, Farhnam-இல் வயதானவர்கள் வீட்டு வளர்ச்சித் திட்டமான ரிவர்சைடு கோர்ட்டுக்காக, நீரூற்று வடிவில் சிற்பத்தின் பெரிய பதிப்பை வடிவமைத்தார். அந்தத் திட்டத்தின் புகைப்படங்கள், தயாரிப்பு ஆய்வுகளை, அருகிருக்கும் தொடுதிரையில் காணலாம்.

## பிரிவு: ஒளி, வெளி, லயம்

வெளி அனுபவத்தை, ஒளியும் நிழலும் எவ்வாறு வடிவமைக்கும்ம? 1960களின் நடுப்பகுதியிலிருந்து 1970கள் வரை, லிம் தம் சிற்பக் கலை குறித்த அணுகுமுறை, இடையறத் தொடர்ந்ததாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் மாறி, கலையின் லயம் அறியமுற்பட்டது. மரம், அலுமினியம் போன்றவற்றைக் கொண்டுஅடிப்படை அலகுகளை உருவாக்கப் பயன்படுத்தினார். அவற்றை எதேச்சையாக ஒழுங்குப்படுத்தி, நிழல் வடிவங்களையும் உருவாக்கினார்.

கலைத் துறையில், செய்ததையே திரும்பச் திரும்பச் செய்தல் கலைஞருக்கு இன்றியமையாதது. அது, அதிர்வையும் தொடர்ச்சியையும் தூண்டும்., பார்வையாளர்கள் தம் கற்பனையில் “வெற்றிடங்களை நிரப்ப“, அது அனுமதிக்கிறது. லிம்மின் படைப்புகள் கணிதப் போக்குடையவை என்றாலும், அவை கண்காணாத இலயத்தால் தூண்டப்படுகின்றன, உதாரணமாக துடிக்கும் ஓர் இதயம், மனங்கவர் மெட்டு, அல்லது நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கை ஒலிகள் போன்றவற்றைக்குறிப்பிடலாம்.. தம் படைப்புகளின் உள்ளர்த்தங்களை வெளிப்படையாக அளிப்பதற்குப் பதிலாக, லிம் அவற்றை நாம் உலகைப் புரிந்து, நாம் அனுபவிக்கும் முறையில் தம் படைப்புகளின் தோற்றங்களை பரிந்துரைக்க விரும்பினார்.

### இன்டர்வெல்ஸ் IIC

1973
தேவ

தேசிய கலைக் கலைக்கூட சிங்கப்பூர் தொகுப்பு
2015-00420-003 மற்றும்
2015-00420-004

“*Intervals*“ தொடர் தொடர் ஏணி போன்று, பல மரக் கட்டமைப்புகளைக் கொண்டிருக்கிறது., ஒவ்வொன்றின் முதுகெலும்பும், சூலத்திருப்பது போன்ற பல கவர்முள் கொண்டது., இங்கே தெரிவது போல, பல முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குகளில் காட்சிப்படுத்தப்படலாம். ஒளி, வெளி இரண்டையும்சிற்ப மூலப் பொருளாக ஆராய்வதற்காக, லிம், கட்டமைப்புகளை சுவரிலும் தரையிலும் ஒழுங்குபடுத்தி, அவற்றின் நிழல்களுடன் வடிவங்களை உருவாக்கினார். அதனால், எதிர்மறை அல்லது “இடைவெளியூடாக உள்ள“ இடங்களின் மதிப்பை புரிந்து கொள்ளுமாறு, பார்வையாளர்களைக் கேட்டுக்கொண்டார்.. இந்த படைப்புகள் உருவாக்கும் நீள்கோடு போன்ற நேரான நிழல்கள், அருகிலிருக்கும் *Link II, Link III* படைப்புகள் உருவாக்கும், மெல்லிய வளைவுகளால் விளையும் நிழல்களுக்கு மனதைக் கவரும் மாறுபாட்டை வழங்குகின்றன.

### இன்டர்ஸ்டைசஸ் II

1977
மஹோகனி

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டூடியோ, லண்டன் தொகுப்பு

1970 களில் லிம் உருவாக்கிய பல சிற்பங்கள், வெளியை அடிப்படையாகக் கொண்டு மறுவடிவமைக்கப்பட்டிருந்தன. *Interstices II* இந்தக் காட்சியகத்தின் மூலையில் தரையும் சுவரையும் இணைக்கும் வகையில காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறை முழுவதும், *Interstices III* நேரடியாக தரையில் அமர்ந்து, பார்வையாளர்கள், அதன் அளவிவனைப் பற்றி மேலும் உடல்ரீதியாக, உணர்வுப்பூர்வமாக அனுபவிக்கச் செய்கிறது. வெற்றிடங்களால் உருவாகும் நிழல்கள், படைப்பின் முக்கிய அம்சம். லிம்முக்கு, எதிர்மறை இடங்கள் காலியாக இல்லை, மாறாக “ இயற்பியல் பொருளாயிருந்து விவரிக்க, பராமரிக்க, மடக்கிக்கொள்ள,குறிப்பிட்ட வகையில் வடிவங்களை பயன்படுத்தி அழுத்தப்படுகின்றன."

## இராவாடி

1979
தேவதாரு

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூட தொகுப்பு
2015-00422

மியான்மாரின் முக்கிய நீர்வழியை தைரியமாக புதிதாகக் கற்பனை செய்கிறது இராவடிதேவதாரு பலகைகளை சுவர் முதல் தரை வரை ஒழுங்குபடுத்தி வைத்து, இராவாடி நதியின் வடக்கு-தெற்கு பயணத்தை நினைவூட்டினார், லிம். தமது படைப்பிற்காகக் கட்டியுருவாக்கிய அடிப்படை மரத்தை அடிப்படையாகப் பயன்படுத்தினாலும், காட்சியகத்தின் இடத்தின் இடமாற்றம் மூலம் ஓர் இயற்கையான ஓட்டத்தையும் லயத்தையும் உருவாக்கினார். தென்கிழக்காசியாவின் பண்டையக் கட்டடக்கலை நிலப்பகுதிகள் ஆகியவற்றிலிருந்து லிம்முக்கு உத்வேகம் கிட்டின.. இராவாடியில், அந்த அனுபவங்களை அப்பழுக்கற்றதாக வடித்திறக்கி வடிவங்களின், வெளியின் மொழியை அனைத்துலக மொழியாய் அணுகுமாறு பார்வையாளர்களை அழைக்கிறார் லிம்.

## பிரிவு: நேர் கோட்டின் எடை

1979 கிம் லிமின் செயல்பாட்டில் திருப்புமுனையாய் அமைந்தது.. இருபது ஆண்டுகளுக்கும் மேலாக மரம், கண்ணாடி இழைமப் பொருள்,, எஃகிரும்பு, வெண்கலம் கொண்டு பணியாற்றிய பிறகு, லிம் தம் கவனத்தைக் கல்லில் சிற்பம் செதுக்குவதற்குத் திருப்பினார். 1979-ல் லண்டனின் ரவுண்ட்ஹவுஸ் கேலரி காட்சியகத்தில் அவரின் முதல் ஆய்வுக் கண்காட்சி, இந்த மாற்றத்திற்குத் தூண்டுதலாக இருந்தது. அது “ஒழுங்கு, நிலையான அனுபவம் உயிர்பொருட் கூறான வடிவங்களின் துடிப்பு , சந்தம் தாளங்களுக்கிடையிலான இழுப்பை"ப் புரிந்துகொள்ள வைத்தது. அந்த எதிர்மறையான கூறுகளை ஒருங்கிணைத்தலே, லிம்மின் காலனித்துவக்கால கற்சிற்பங்களுக்கான தொடக்கமாக அமைந்தது.

இயற்கை உலகின் கவனிப்புகளை வலிமைமிக்கவையாக கற்சிலையாக வடித்திறக்கிய லிம், பரிசுத்தமாகச் செய்த லிம், தண்ணீர் சரிவோ அல்லது வெப்பம் காரணமாக ஏற்பட்ட வெடிப்போ போன்ற இயற்கைப் பேரிடர் நிகழ்ச்சிகளை நினைவூட்டும் சக்திவாய்ந்த படைப்புகளையே உருவாக்கினார். கல்லின் விளிம்புகளைக் கவனமாக வடிவமைத்து, மாறுபட்ட எடைகளில் கோடுகளைப் பொறித்து, சிற்பத்தின் வடிவத்தை வரையறுப்பதில் ஒளியைச் சமமாகப் பயன்படுத்தினார்.

## ட்ரேஸ் II

1982
கல்

ஆர்ட்ஸ் கவுன்சில் தொகுப்பு, சவுத்பேங்க் மையம், லண்டன்

*Trace II* இல், லிம், ஒரு துண்டு கல்லில் ஆழமான, வளைந்த கோடுகளைப் பொறித்து, அவை மென்மையான, பொலிவான மேற்பரப்பில் ஓடி, சீரற்ற விளிம்புகளை அடைய அனுமதித்தார். பொருளின் மீதிருந்த உள்ளுணர்வுகளால் வழிநடத்திய லிம், தமது படைப்புகளைக், கல்லில் கோடுகளை வரைவதிலிருந்து தொடங்கினார். பிறகு, அந்தக் கோடுகளை எவ்வளவு பெரியதாக அல்லது ஆழமாகச் செய்யலாம் எனத் தீர்மானித்தார். அவரின் குறிக்கோள், இடத்தை தன்னகத்தே கொள்வதும், இருள் ஒளிக்கிடையிலான மாறுபாடுகளைக் கொண்ட இடத்தை உருவாக்குவதுமாக இருந்தது.

## நாகா

1984
போர்ட்லாந்து கல்

தேசியக் கலைக்கூடம் சிங்கப்பூர் தொகுப்பு
2015-00425

இந்தச் சிற்பம் இந்து, புத்தர் மத புராணங்களில், நீர், மழையுடன் தொடர்புடைய பாம்பு போலும் உயிரினமான நாகாவின் பெயரால் குறிப்பிடப்படுகிறது. இந்தச் சிற்பம், ஏழு செருகுக் கட்டைபோன்ற பாளங்களைக் கொண்டது. அவை பரந்து விரிந்து கிடக்கும் தரையில் ஒழுங்கின்றி வழுக்கிச் செல்வது போலத் தோற்றமளிக்கின்றன. அவற்றின் மேற்பரப்பில் பொறிக்கப்பட்ட கோடுகள், இணைக்கப்பட்டிருக்கின்றன. "*Spiral*" தொடருக்குப் பிறகு விரைவில் உருவாக்கப்பட்ட, "நாகா", "*Spiral*" தொடர்களில் பல மாறுபாடுகளை உருவாக்கினார் லிம். அவை பெரும்பாலும் வெளியில், தோட்டங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றன, அருகிலுள்ள திரையில் காட்டப்பட்டிருப்பது போல.. இரு தொடரிலும் முடிவிலி அமைப்பு உண்டு., அவை நிறைவுக்குப் பதிலாக தொடர் இயக்கத்தையும், நிறைவில்லா தொடர்ச்சியையும் பரிந்துரைக்கின்றன.

## பத்மா III

1985
போர்ட்லாந்து கல்

பாட்ரிசியா லீயின் திரட்டு

பத்மா III என்பது, சமஸ்கிருதத்தில் தாமரைப்பூவைக் குறிப்பிடும் பெயர். உ அது இரண்டு பகுதிகளைக் கொண்ட சிற்பம்., ஒரு பெரிய கல் துண்டு மற்றொரு கல்லின் மேல் சமநிலையுடன் இருக்கிறது. வெவ்வேறு ஆழத்தில் வளைந்த கோடுகளை அவற்றில் பொறித்தார் லிம் —சில பனிப்பாறை பிளவு போல் ஆழமாகவும், சில கல்லின் இயற்கைக் கதிர்மணி போலமென்மையானதாகவும் இருக்கும்.. இந்த கோடுகளை பொறித்து, செதுக்கிய, உளிக்குறிகளைத் தடையாய் விடுவதன் மூலம், கல்லின் எடைப் பரிமாணத்திற்கு எதிராக செயல்பட முயன்றார், மேற்பரப்பில் பல்வேறு அமைப்புகளை உருவாக்கினார். இருப்பினும் கல் அதன் அடிப்படை வடிவத்தைத் தக்க வைத்துக்கொள்ளும்.: நான்கு பக்கங்களும் தட்டையான மேற்பரப்பும். லிம் தாம் தேர்ந்தெடுத்த பொருளின் மீது கொண்ட மரியாதையையும், அனுசரித்த நெருக்கமான ஒத்துழைப்பையும் வெளிப்படுத்துகிறது.

## மார்பிள் ரிலீஃப் (ச்சாரிங்கா)

1987
ச்சாரிங்கா சலவைக்கல்

தேசியக் கலைக் கூடம், சிங்கப்பூர் தொகுப்பு
2015-00423

சலவைக்கல் சவாலான பொருள், அதன் உறுதித் தன்மைகாரணமாக அதனைச் சிற்பமாக்க, பொறுமையும் திறமையும் தேவைப்படுகிறது. கலைஞர்கள் பொதுவாக கல் இரம்பம்,, மரச்சுத்திகள், உளிகள் கொண்டு கல்லைச் செதுக்கி, வடிவமைக்கின்றனர். ச்சாரிங்காவிஇல், லிம் தம் பெரிய தரை அடிப்படையிலான படைப்புகளை விடுத்து,, சுவரில் பொருத்துவதற்காக நீளமான,, மெல்லியஒரு துண்டை உருவாக்கினார். மிகுந்த கவனத்துடன் சலவைக்கல்லின் மேற்பரப்பை மிருதுவாக்கி, அதன் விளிம்புகளை மென்மையாக்கினார். நேர்க்கோட்டில் இரு குறுகிய கோடுகள் கவனமாகப் பொறிக்கப்பட்டு, பார்வையாளர்களை ஒளிக் கல்லுடன் எப்படி சேர்க்கிறது என்பதைக் காண, பார்வையாளர்கள் அழைக்கப்படகின்றன.

## கூடா

1989
ரோஸ் ஆரோரா சலவைக்கல்

தனியார் திரட்டு

ரோஸ் ஆரோரா சலவைக்கல்லில் செதுக்கப்பட்ட கூடா, இளஞ்சிவப்பு, பாலேடு மற்றும் பழுப்பு நிறங்களை வெளிப்படுத்துகிறது. லிம், கல்லின் சுட்சுமுமான பண்புகளை நுனி அலை போலும் ஏற்ற இறக்கமும், செங்குத்து கீறல்களும் கொண்ட அதன் மேற்பரப்பில் வலியுறுத்தினார். அதிகமாகப் பொலிவூட்டுவதை, அவர் தவிர்த்தார், அது ஒரே மாதிரியான தோற்றத்தை உருவாக்கி, பார்வையாளருக்கும் படைப்பிற்கும் இடையே ஒரு தடையாக இருக்கும் என்று நம்பினார்.

கோடுகளைப் பயன்படுத்தி பார்வையை வழிநடத்தி, படைப்பின் உட்புறத்தில் லயத்தை உருவாக்கினார் லிம். அங்கே, சலவைக்கல்லின் வழக்கமான கட்டடப் பிணைப்புகள் உயிர்பொருட் வடிவமாக மாற்றப்பட்டுள்ளன. கூடா என்ற தலைப்பு மலாய் மொழியில் “குதிரை" என்பதைக் குறிக்கிறது. அது சதுரங்க விளையாட்டின் கோபுரத்தையும் நினைவூட்டுகிறது. தம் கணவரும் சிற்பியுமான வில்லியம் டர்ன்புல்லுடன், சதுரங்கம் விளையாடுவதில் மகிழ்ச்சியடையும் லிம், 1950களின் பிற்பகுதியிலிருந்து தம் படைப்புகளில் சதுரங்கத்தின் 32 கவறுகளைக் குறிப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

## ஸ்லேட் ரிலீஃப்

1994 & 1995
ஸ்லேட்

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டுடியோ, லண்டன் தொகுப்பு

## சிங்கோபேஷன் I

1995
ஸ்லேட்

டினா சியோங் லியோங் வாஹ் கியோங் சேகரிப்பு

1990களின் நடுப்பகுதியில், லிம் கல்லேட்டைப் பயன்படுத்திச் சுவரில் பொருத்தக்கூடியவற்றை உருவாக்கினார். அது எளிதில் மெல்லிய தாள்களாகப் பிளவடையும் மென்மையான கல்லேடு, நுண்ணிய தானியங்களைக் கொண்டது. அந்தப் படைப்புகள் அவரின் முந்தைய அச்சுகள், சிற்பங்களில் ஆராயப்பட்ட வடிவங்கள், கூறுகளை மீண்டும் சந்திக்கின்றன. தம் அந்திமக்காலத்தில், லிம் படைப்புகளில் சமநிலையை ஏற்படுத்த முயன்றார். அதை அவர் “உண்மையைப் பார்க்கினும் உணரப்படும் சமநிலை" என்று விளக்கினார். எலும்பாலான அமைப்புகள், கிளிஞ்சல்கள் இலை வடிவங்களால் தூண்டப்பட்ட இந்தப் படைப்புகள், இயற்கை அமைப்புகளை ஆராய்ந்த லிமின் நீடித்துழைக்கும் ஆராய்ச்சியைப் பிரதிபலிக்கின்றன.

## ரிவர்-ரன்

1992–1993

ஹாப்டன்வுட் கல்

தேசியக் கலைக்கூடம் சிங்கப்பூர் தொகுப்பு
2015-00424

## பெயரிடப்படாதது II

1993–1997
சரளைக்கல்

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டுடியோ, லண்டன் தொகுப்பு

*Untitled II River Run* ஆகியன கல்லின் பண்புகள், செதுக்கும்போது அது வழங்கும் “பின்னூட்டம்" அடிப்படையில், லிம் ஆய்வு செய்த வெவ்வேறு வகையறாவை—கிடைமட்ட, செங்குத்து—காட்டுகின்றன. சரளைக்கல் கொண்டு உருவாக்கப்பட்ட *Untitled II*, லிம்மின் எதிர்பாரா மறைவுக்கு முன், 1997ல் உருவாக்கிய கடைசி படைப்புகளில் ஒன்றாகும். லிம் பயன்படுத்திய சலவைக்கற்கள், சலளைக் கற்கள் மிகவும் கனமாக இருந்தாலும், அவர் தொழிற்கூட உதவியாளர்களில்லாமல் தனியாகவே பணியாற்றுவதைக் கேட்டார். அது அவரின் படைப்புகளோடு நேரடித் தொடர்பைப் பராமரிக்க அவரை அனுமதித்தது. “நான் என் உலகின் அனுபவத்தைத் தெரிவிக்கக்கூடிய தனிப்பட்ட உவமையைத் தேடிக்கொண்டு இருக்கிறேன். நான் மற்றவர்களின் மறுமொழியை பதில்களை எதிர்பார்க்க முடியும் என நம்புகிறேன்" என்று லிம் விளக்கினார்.

**இடமிருந்து வலமாக:**

## இன்டர்வெல் தொடர்

1972
அசிடேட் மீது திரை அச்சு

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டுடியோ, லண்டன் தொகுப்பு

**வலக் கோடி:**

## இன்டர்வெல் தொடர்

1972
அசிடேட் மீது திரை அச்சு

தேசிய கலைக்கூடம், சிங்கப்பூர் தொகுப்பு
P-1223

1970களில், லிம் அச்சுத்தொழிலுக்கு பரிசோதனை அணுகுமுறையைக் கையாண்டார்.. காகிதத்தைப் பயன்படுத்துவதற்கு பதிலாக, ஒளி ஊடுருவும் தாள்களில் அச்சிட்டு, ஒளி செல்ல, சுவரிலிருந்து தள்ளி தொங்கவிட்டு,. கலைப்படைப்புகள் எப்படி காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்ற மரபுகளிலிருந்து விலகினார். அவரின் *Intervals* தொடரில், ஒன்று மற்றதுடன் இணையும் வடிவங்களில் தோன்றும் நிறங்கள், ஒளியுடன் இணைந்து, முப்பரிமாண தரம் இயக்கத்தின் உணர்வு ஆகியவற்றை உருவாக்குகின்றன.

## ஏ மைனர்

1979
காகிதத்தில் மரச்செதுக்கு அச்சு

## சி மேஜர்

1979
காகிதத்தில் மரசெதுக்கு அச்சு

## வுட்கட் ‘ஏ மைனர்’

1979
ஜப்பானியக் கைத்தறிக் காகிதத்தில் மரச்செதுக்கு அச்சு

## வுட்கட் ‘சி மேஜர்’

1979
ஜப்பானியக் கைத்தறிக் காகிதத்தில் மரச்செதுக்கு அச்சு

தேசிய கலைக்கூடம் சிங்கப்பூர் தொகுப்பு
2015-00426 | 2015-00427 | 2016-00041 | 2016-00042

ஏ மைனர், சி மேஜர் மரச்செதுக்கு அச்சுகளில், லிம் வெவ்வேறு காகிதங்களில் ஒரே வடிவத்தை மீண்டும் பயன்படுத்தினார். அந்த அச்சுகளின் தலைப்புகள் எடுத்துக்காட்டும் வகையில், லிம் தமது படைப்புகளை, இசை தொடர்பான குறிப்புகளைக் கொண்டு பேசினார். இசையமைப்பாளர் ஒருவர், இசைப் பாசுரத்தை மீண்டும் இடம்பெறச் செய்வது போல, லிம் குறிப்பிட்ட வடிவங்களை மீண்டும் சந்தித்து, பலவித விளைவுகளையும் மாறுபாடுகளையும் உருவாக்கினார். உதாரணமாக, சி மேஜரில் உள்ள செங்குத்துப் படிமங்கள், லிம்மின் முந்தைய படைப்புகளில், Stack, Cut Paper Work தொடரில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன, இவை முந்தைய அறையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தன.

## கேட்

1974
காகிதத்தில் மரச்செதுக்கு அச்சு

தேசிய கலைக்கூடம், சிங்கப்பூர் தொகுப்பு
2015-00428

கேட் இல் குறுக்கிடும் நீண்ட குறுகிய மெல்லிய மரத்துண்டால்உருவான வடிவங்கள், இந்த காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள Stack, Bridge போன்ற பின்பற்றிய சிற்பங்களில் பிரதிபலிக்கின்றன. இது சுவாரஸ்யமான கேள்வியை எழுப்புகிறது: லிம் , காகிதத்தில் இருந்த சிந்தனைகளை சிற்ப வடிவமாக மாற்றும் முன்பு பரிசோதித்தாரா? லிம் வெவ்வேறு பொருட்கள், வெவ்வேறு அளவுகளில் பயன்படுத்தி பணியாற்ற விரும்பினார். “நான் உருவத்தை ஓர் அளவையாகப் பயன்படுத்துகிறேன்" என்று கூறிய லிம், அவர் ஒரு படத்தை இரண்டு முறை அச்சிடுவார், அல்லது சில நேரங்களில் அதைத் திருப்பி அச்சிடுவார் என்பதையும் குறிப்பிட்டார். அச்சுப்பொறியில் படைப்புகளை உருவாக்கும் திறமையில் லிம் ஆர்வமாக இல்லை. அதற்குப் பதிலாக, அவர் அதைத் தனிப்பட்ட பண்புகளுடன் கூடிய ஊடகமாக மதித்தார்.

## Cut Paper Work

1976 to 1978
காகிதத்தில் அச்சு

கிம் லிம் எஸ்டேட்/டர்ன்புல் ஸ்டுடியோ, லண்டன் தொகுப்பு

இந்த வெட்டுக் காகிதப் பணிகள், இடைப்பட்ட இடங்களைப் பற்றிய லிம்மின் ஆர்வத்தை எடுத்துக்காட்டுகின்றன. ஜப்பானியக் காகிதத்தின் சிறப்பான தரத்தால் ஈர்க்கப்பட்ட லிம், அதில் அச்சிடாமல் இருக்க முடிவு செய்தார். அதற்கு பதிலாக, அவர் கவனமாகப் பரிசோதனை வடிவங்களை காகிதத்தில் வெட்டி, ஒளி ஊடுறுவ அனுமதித்தார். அதனால், லிம், பல்வேறு கிடைமட்ட, செங்குத்து வடிவங்களில் ஒளியை, இடத்தை விரைவாக மறுசீரமைக்க முடிந்தது. சிலவற்றை மூடியவையாகவும், மற்றவற்றை திறந்தவையாகவும் வைத்தார். அதன் மூலம், ஒளி, வெளி நிழல் ஆகியன பொருளுக்கு துணை இல்லாமல், படைப்பின் முக்கிய அம்சங்களாக மாறுகின்றன.

## Photography

லிம் தம்த முறைப்படியான கலைக் கல்வியை, தாமே தொடங்கிய பயணங்கள், படிப்புப் பயணங்களால் பணம் திரட்டினார். அவர் கிரீஸ், இத்தாலி, சீனா, ஜப்பான், இந்தியா, இந்தோனேசியா, கம்போடியா, எகிப்து, மலேசியா, துருக்கி ஆகிய பல நாடுகளுக்குப் பயணம் செய்து,  புகைப்படங்களால், அவர் பார்த்ததை ஆவணப்படுத்தினார். லிம் தமது பயணங்களிலிருந்து திரும்பியபோது, அந்த புகைப்படங்களை வீட்டிலேயே அச்சிட்டார். . அந்தப் பயண புகைப்படங்களில் சில, இங்குக் கா ட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. .